**செ. கு. எண்:188** **நாள் :26.09.2014**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்**
**அறிக்கை – 26.9.2014**

நெசவுத் தொழிலுக்கு பெயர் பெற்ற எடப்பாடி நகரம் 1.4.1965 அன்று மூன்றாம் நிலை நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்டு தற்போது முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, இந்த ஆண்டு தனது பொன் விழா ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது.

28.22 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட எடப்பாடி நகரின் மையப் பகுதியில் சரபங்கா நதியும், நஞ்சுண்டேஸ்வரர் சிவாலயமும் அமைந்துள்ளன. இந்த நகராட்சியில், 30 வார்டுகள்; 105.75 கிலோ மீட்டர் நீள சாலைகள்; 2,441 தெரு விளக்குகள்; 2 பூங்காக்கள்; 15 ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகள்; ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் ஒரு அரசு மருத்துவமனை உள்ளன.

கடந்த மூன்று ஆண்டுகளில், எடப்பாடி நகராட்சியில் 27 கோடியே 83 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் திட்டப் பணிகள், சாலைகள், மழைநீர் வடிகால்கள், திடக்கழிவு மேலாண்மை பணிகள், கட்டடங்கள், பூங்காக்கள் உள்ளிட்ட 92 அடிப்படை வசதிப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, அவற்றில் பெரும்பாலான பணிகள் நிறைவேற்றப்பட்டு உள்ளன. எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

பொன்விழா ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ள எடப்பாடி நகராட்சியின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யுமாறு அந்தப் பகுதி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வரப் பெற்றுள்ளன.

எடப்பாடி நகராட்சி தனது பொன்விழா ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ள இந்தத் தருணத்தில், பொன் விழா ஆண்டினை நினைவுகூரும் வகையில், எடப்பாடி நகராட்சியின் குடிநீர் விநியோக மேம்பாடு, தார்சாலை மேம்பாடு, சிமெண்ட் சாலைகள் அமைத்தல், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைத்தல், தெரு விளக்குகள் பொருத்துதல், திடக்கழிவு மேலாண்மை, புதிய கழிப்பிடங்கள் அமைத்தல், குளங்களை சீரமைத்தல், பேருந்து நிலைய மேம்பாடு, அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல் உள்ளிட்ட பல்வேறு அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக, எடப்பாடி நகராட்சிக்கு சிறப்பு உதவித் தொகையாக 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பணிகள், எடப்பாடி நகராட்சியின் உட்கட்டமைப்பு வசதிகளை மேலும் மேம்படுத்த வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**